**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கமுதி.**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**குற்றவியல் நடுவர். கடலாடி (மு.கூ.பொ)**

**2026 ம் வருடம் ஜீன் திங்கள் 16 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

குற்றவியல் பல்வகை மனு எண். 198/2026

சி.பி. எண். 106/2026

முருகன் (56/26),
த/பெ.மகாலிங்கம்,
க.எண்.7–170, குதிரைமொழி
மூக்கையூர் அஞ்சல்,
கடலாடி தாலுகா,
இராமநாதபுரம் மாவட்டம். ... மனுதார் / வாகனத்தின் உரிமையாளர்

/ இடையே/

அரசுக்காக ஆய்வாளர் அவர்கள்,
சாயல்குடி காவல் நிலையம்,
இராமநாதபுரம் மாவட்டம்.
குற்ற எண்.165/2026
U/s.14(A), 4(1)(A) TNP AMENDMENT ACT ... குற்ற முறையீட்டாளர்

இம்மனுவின் மீதான இறுதி விசாரணை 16.06.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்னர் வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.அழகுமுத்துஅரியப்பன்., அவர்களும், அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 திரு.ஆலன்ராயன் அவர்கள் முன்னிலையாகி வாதிட்டதின் பேரில் இரு தரப்பு வாதங்களையும் உரிய கவனத்துடன் கேட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

இம்மனுவானது 503 & 497 BNSS–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் வழக்கு சொத்தான TN 65 AX 0954 என்ற எண்கொண்ட Bajaj Pulsar 150 DTSI BSIV Royal Blue என்ற இருசக்கர வாகனத்தை இடைக்கால பொறுப்பில் தரக் கோரி மனுவை தாக்கல் செய்துள்ளார்.

1. மனுதாரர் TN 65 AX 0954 என்ற எண்கொண்ட Bajaj Pulsar 150 DTSI BSIV Royal Blue என்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் என்றும், குற்றமுறையிடுவோரால்

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.16 13:56:23 +0530

குற்ற எண். 165/2026, U/s.14(A), 4(1)(A) TNP AMENDMENT ACT –ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி வாகனம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் C.P.No. 106/2026 என இருந்து வருவதாகவும், மேற்படி வாகனத்தின் Chasis No.MD2A11CY6HWB22683, Engine No.DHYWHB77126 என்றும், மேற்படி வாகனத்தை மனுதாரரிடம் வழங்கும் பட்சத்தில் அதை விற்கவோ மாற்றம் செய்யவோ மாட்டார் என்றும், வழக்குச் சொத்தை வழங்கும் பட்சத்தில் நீதிமன்றம் விதிக்கும் எந்த ஒரு நிபந்தனையையும் ஏற்க தயாராக உள்ளார் என்றும், வழக்குச் சொத்தானது காவல் துறை வசம் இருந்து வரும் பட்சத்தில் அது பழுதாகி விடுவதுடன் பயன்படுத்த முடியாமல் போய்விடும் என்றும், தனக்கு பெருத்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும் என்றும், வழக்கு விசாரணையின் போது வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் தயாராகவும் உள்ளார் என்றும், போதுமான பிணையம் அளிக்கவும் தயாராக உள்ளார் என்றும், மேற்படி வழக்குச் சொத்தின் அசல் RC Book தற்போது Sriram Finance Ltd, வசம் உள்ளது என்றும், மேற்படி வழக்குச் சொத்தை மனுதாரர் வசம் இடைக்காலப்பொறுப்பில் ஒப்படைக்குமாறு மனுதாரர் வழக்கறிஞர் வாதிட்டார்.

2. காவல் துறையினர் பதில் மனுவில் இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட TN 65 AX 0954 என்ற எண்கொண்ட Bajaj Pulsar 150 DTSI BSIV Royal Blue என்ற இருசக்கர வாகனத்தை குற்றமுறையிடுவோரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைத்து சி.பி எண்.106/2026 பெறப்பட்டு காவல் நிலைய பாதுகாப்பில் இருந்து வருவதாலும், வழக்குச் சொத்தை மனுதாரரிடம் ஒப்படைத்தால் வாகனத்தின் நம்பர் பிளேட், கலர் ஆகியவற்றை மாற்றி விடக்கூடும் என்பதாலும், வேறு ஒரு நபரிடம் விற்கக் கூடும் என்பதாலும், மேலும் இது போன்ற குற்ற செயல்களுக்கு மீண்டும் பயன்படுத்தக்கூடும் என்பதாலும், வழக்கு முடியும் வரை வழக்குச் சொத்தை மனுதாரரிடம் ஒப்படைக்க கடும் ஆட்சேபணை தெரிவித்துள்ளனர். கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரும் இதே கருத்தை தெரிவித்துள்ளார்.

3. மனு, பதில் மனு மற்றும் வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில் மேற்படி வழக்குச் சொத்தை எதிரியிடமிருந்து குற்றமுறையீடுவோரால் கைப்பற்றி சி.பி.எண்.106/2026 என்று நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்குச் சொத்தை பயன்படுத்தியே குற்றச் சம்பவம் நடைபெற்றுள்ளது என அரசு தரப்பில் தெரிவித்துள்ள போதிலும், அது குறித்து வழக்கு விசாரணைக்கு பிறகு தான்

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.16 13:56:35 +0530

முடிவு செய்ய இயலும் என்பதாலும், இவ்வழக்கின் மனுதாரர் எதிரி என தெரியவருவதாலும், மேற்படி வழக்குச் சொத்தானது மனுதாரருக்கு பாத்தியமானது என்று தெரிய வருவதாலும், அது வரை மேற்படி வாகனத்தை பயன்படுத்தாமல் காவல்நிலையத்தில் வைத்திருந்தால் வாகனத்தின் பாகங்கள் பழுதடையக்கூடும் என்பதாலும், எதிர்காலத்தில் அது பயனற்ற நிலைக்கு போய்விடும் என்பதாலும், அதன் மறுமதிப்பு குறைந்து போய்விடும் சூழ்நிலை ஏற்படும் என்பதாலும் மேற்படி வழக்குச் சொத்தானது மனுதாரருக்கு சொந்தமானது என்பதை காண்பிக்க அவரின் RC Book நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாலும், **மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் சுந்தர்பாய் அம்பாலால் தேசாய் எதிர் குஜராத் மாநிலம்** (2002(10) SSC 253) **வழிகாட்டுதலின் படியும் மற்றும் Criminal Rules of Practice 2019 Rule 257(1)ன் படி** வழக்குச் சொத்தை இடைக்காலமாக ஒப்படைப்பதே நீதியின் நலனுக்கு சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. முடிவில் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து உரிமையாளரான மனுதாரர் வசம் வழக்குச் சொத்தை இடைக்காலமாக ஒப்படைக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**நிபந்தனைகள்;—**

4. மனுதாரர் மேற்படி வழக்குச் சொத்தான TN 65 AX 0954 என்ற எண்கொண்ட Bajaj Pulsar 150 DTSI BSIV Royal Blue என்ற இருசக்கர வாகனத்திற்கு ஈடாக ரூ.50,000/— (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஒருநபர் பிணையம் வழங்க வேண்டும் எனவும்,

5. வழக்குச் சொத்தான இரு சக்கர வாகனம் Sriram Finance Ltd, ல் அசல் பதிவுச்சான்று உள்ளதாக தெரிவித்துள்ளதால், மேற்படி நிறுவனத்தில் இருந்து NOC சான்று பெற்று தாக்கல் செய்ய வேண்டும் என்றும்,

6. வழக்கு சொத்து ஒப்படைக்கப்பட்ட காலகட்டத்தில் மனுதாரர் வழக்கு சொத்தினை உருமாற்றம் செய்யவோ, விற்பனை செய்யவோ, அடமானம் வைக்கவோ முயற்சிக்ககூடாது.

7. இந்த வழக்கு சொத்தினை விசாரணை காலத்திலும், நீதிமன்றம் கோரும் போது ஒப்படைக்க வேண்டும்.

8. இந்த நீதிமன்றத்தில் வழக்கு சொத்திற்கான புகைப்படம் சி.டி, ஆகியவற்றினை மனுதாரர் ஒப்படைக்க வேண்டும்.

9. இந்த வழக்கு சொத்திற்கான பஞ்சநாமா தலைமை எழுத்தர் எழுதி பெற்றிட

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.16 13:56:41 +0530

வேண்டும்.

10. மேற்படி வாகனத்தை அரசுக்கு ஆதாயப்படுத்தும் நடவடிக்கைக்காக கேட்கும் போது உடன் எந்தவித காரணமும் சொல்லாமல் இந்நீதிமன்றத்திலோ அல்லது விசாரணை நீதிமன்றத்திலோ அல்லது நீதிமன்றம் உத்தரவிடும் அதிகார வரம்பிடமோ ஒப்படைப்பேன் என்று பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும் எனவும்,

11. மேற்படி நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்றை மீறும் பட்சத்தில் இந்த உத்தரவு தன்னிச்சையாக ரத்து செய்யப்பட்டு, மேற்படி வழக்கு சொத்தானது அரசுக்கு ஆதாயம் செய்வதற்கான நடவடிக்கை தொடங்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு (16.06.2026) இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA — Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.16 13:56:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி( மு.கூ.பொ)